DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.119/2025
Prosecution Witness P.W.17

| | |
|---|---|
| Name : **திரு.வெற்றிவேல்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்
**நாள்: 28.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது தேனி மாவட்டம் அல்லிநகரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் இதற்கு முன்பு நான் தேனி குற்றப்பிரிவு காவலராக பணிபுரிந்த போது பிசி பட்டி காவல் நிலைய குற்ற எண். 454/2024 வழக்கில் புலன் விசாரணைக்கு உதவியாக காவல் ஆய்வாளர் என்னை நியமித்தார். சம்பவம் நடந்த அணை கருப்புசாமி கோயில் அங்கிருந்த சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ததில் அந்தப் பகுதியில் இரண்டு நபர்களும் மற்றும் ஒன்பது நபர்களும் தங்கள் தலைகளை குனிந்தவாறு நடந்து சென்ற காட்சிகளை அந்த சிசிடிவி–யில் பதிவாகி இருந்ததை பார்த்தோம். அப்போது PC பட்டி காவல் நிலையத்தில் ரோட்டை பார்த்தவாறு அமைந்துள்ள சிசிடிவி பதிவுகளை நாங்கள் ஆய்வு செய்தபோது அந்த நபர்கள் அவ்வழியாக வரவில்லை என்பது தெரிந்தது.

2. வேறு எந்த வழியாக அவர்கள் சென்றிருக்க கூடும் என்று நாங்கள் தேடிப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது கம்பம் தேனி மெயின் ரோட்டில் வாட்டர் டேங்க் அருகே உள்ள மெட் ஹோப் ஹெல்த் சென்டர் மருத்துவமனையின் சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தபோது அதில் மொத்தம் 6

நபர்கள் இரண்டு வாகனத்தில் முதலில் வந்தது தெரிந்தது. அதன் பிறகு வழக்கறிஞர் திரு. ஸ்ரீதர் என்பவர் அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை பார்வையிட்டோம். அதில் இறந்து போன தாமோதரன் அந்த சாலையின் வழியாக அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தது தெரிய வந்தது. அதன் பிறகு அந்த 6 நபர்களும் தேனி – குமுளி சாலையில் அந்த சிசிடிவி கேமரா பதிவுகள் வாயிலாக சென்றது தெரிந்தது.

3. அதன் பிறகு குமுளி சாலையில் போடி விலக்கை தாண்டி பார்த்தபோது அந்த வழியாக அவர்கள் செல்லவில்லை என்பது தெரிய வந்தது. மீண்டும் திண்டுக்கல் பைபாஸ் சாலையில் பார்த்தபோது அவ்வழியாக உள்ள கட்ரோடுகள் ஒவ்வொன்றையும் உள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தபோது அங்கு வீரப்ப அய்யனார் கோயில் ரோடு அல்லிநகரம் செல்லும் வழியில் செந்தட்டி அய்யனார் கோயில் ரோட்டை பார்த்து அமைந்திருந்த கேமராவை ஆய்வு செய்தபோது அதில் அந்த 6 நபர்களும் பைக்கில் கடந்து செல்வது அந்த கேமராவில் தெரிந்தது.

4. அதன் பிறகு அதைத் தாண்டி உள்ள கலா என்பவரது வீட்டில் சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தபோது அதை கடந்து சென்றது தெரிந்தது. அதன் பிறகு தவமயம் என்ற இடத்தில் இருந்த சிசிடிவி பதிவுகளை பார்க்கும் பொழுது அதில் ஒரு வாகனம் 100 மஹால் பக்கமாகவும் மற்றொரு வாகனமானது கோகிலா மருத்துவமனை செல்லும் வழியில் சென்றது தெரியவந்தது. கோகிலா மருத்துவமனை செல்லும் வழியில் இருந்த வண்டியில் இருந்த ஒரு நபர் நூர் மஹால் செல்லும் வாகனத்தில் நான்காவது நபராக அந்த இருசக்கர வாகனத்தில் ஏறிக்கொண்டது தெரிந்தது. அதன் பிறகு நூர்மஹால் சாலையில் உள்ள கேமரா சிசிடிவி கேமராவை பார்க்கும் போது அந்த நபர்கள் அந்த வழியாக சென்றது தெரியவந்தது.

5. அதன் பிறகு தேனி நேரு சிலை கேமராவை பார்க்கும் பொழுது அதில் அவர்கள் வரவில்லை என தெரிந்தது. அதன் பிறகு சுப்பன் செட்டி தெரு

பகுதியில் உள்ள மசூதியில் கேமராவை ஆய்வு செய்த போது மீதமுள்ள 3 நபர்களும் மசூதியை கடந்து சென்றார்கள் என்பது தெரிய வந்தது. அதன் பிறகு சம்பவ இடத்தில் சி.டி.ஆர் தம்டவர் போட்டும் அதில் வாகனத்தில் செல்போனில் பேசி சென்ற எண்ணும் சம்பவத்தில் பதிவாகி இருந்த தம்டவர் அனலைஸ் செய்யப்பட்டது. நான் பார்வையிட்ட சிசிடிவி பதிவுகளை எனது செல்போனில் படம் பிடித்துக் கொண்டேன். அதை பென் டிரைவில் காப்பி செய்து நான் ஆய்வாளர் வசம் கொடுத்தேன். அதற்கு 65 (B) சான்றிதழ் போட்டு நான் ஆய்வாளரிடம் கொடுத்தேன். மொத்தம் 3 பென்டிரைவ் கொடுத்தேன். மொத்தம் ஐந்து சிசிடிவி கேமரா பதிவுகளை நான் செல்போனில் படம் பிடித்து ஒரு பென் டிரைவில் காப்பி செய்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.மொத்தம் நான் ஏழு இடங்களில் சிசிடிவி பதிவுகளை பார்வையிட்டு அதை எனது செல்போனில் படம் எடுத்தேன். அதை மொத்தம் மூன்று பென் டிரைவ்களாக காப்பி செய்து ஒப்படைத்தேன். நான் கொடுத்த 65 (B) சான்றிதழ் வழங்கினேன். அந்த மூன்று பென்டிரைவ் மற்றும் அது சம்பந்தமான சான்றிதழ்கள் அ.சா.ஆ.17,18 மற்றும் 19. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

எந்தெந்த இடங்களில் எத்தனை மணிக்கு சிசிடிவி பதிவுகள் அடங்கிய விபரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று நேரம் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. இந்த ஏழு இடங்களை போய் பார்த்து தேடி எடுப்பதற்கு எனக்கு மூன்று நாட்கள் ஆனது. எனக்கு உதவியாக எஸ்.எஸ்.ஐ. நாகராஜன் என்பவர் உடன் வந்திருந்தார். என்னுடன் இந்த சிசிடிவி பதிவுகளை பார்வையிடுவதற்கு ஆய்வாளர் உடன் வரவில்லை. மெட் ஹோம் ஹாஸ்பிடல் சிசிடிவி பதிவுகளை பார்ப்பதற்கு மட்டும் ஆய்வாளர் என்னுடன் வந்தார், மற்ற இடங்களுக்கு அவர் வரவில்லை. சம்பவத்தில் இருந்த ஏழு எதிரிகள் தான் ஈடுபட்டார்கள் என்பதை நான் எதன் அடிப்படையில் தெரிந்து கொண்டேன் என்றால் சிசிடிவி பதிவுகள் மூலமாக நான் தெரிந்து கொண்டேன். அந்த

வண்ணான் துறைக்கும், கோயிலுக்கும், ஆற்றில் குளிப்பதற்கும் ஒரு நாள் பல நபர்கள் செல்லக்கூடும் என்பதால் அவ்வாறு இருக்கும் பட்சத்தில் எப்படி இந்த ஏழு எதிரிகள் மட்டும் இந்த சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்ற விவரத்தை நான் சிசிடிவி பதிவுகள் வாயிலாக தெரிந்து கொண்டேன் என்றால் சி.டி.ஆர் எண்கள் போட்டு பார்த்தும், தம்டவர் பார்த்தும் அதேபோல் சிசிடிவி பதிவுகளை பார்த்தோம் நான் இந்த ஏழு எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேன்.

**<u>எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எந்த எதிரிகள் யார் யாருடன் எந்த வண்டியில் சென்றார்கள் அவர்கள் என்னென்ன உடைகள் அணிந்து இருந்தார்கள் என்ற விபரங்கள் சொல்ல முடியுமா என்றால் ஒரு நபர் டிவிஎஸ் பைக்கில் சென்றார். மற்றொரு நபர் ஸ்பெளண்டர் வண்டியில் சென்றார் அவர்கள் உடுத்தி இருந்த உடைகளை நான் சரியாக கவனிக்கவில்லை. டிவிஎஸ் ஸ்ப்ளெண்டர் வண்டி பல ஆயிரம் வண்டிகள் தேனியில் உள்ளது என்றால் சரிதான். அதில் சென்ற வண்டி இந்த வண்டி தான் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரிதான்.

2. நான் சொன்ன விபரங்கள் அனைத்தும் வழக்குக்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றும், நான் சிசிடிவி ஆய்வுகளை முறையாக மேற்கொள்ளவில்லை என்றும், சொன்ன முறையில் சொன்ன விதத்தில் அவை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வேண்டுமென்றே அவர்களை இந்த வழக்கில் சேர்த்து உள்ளோம் என்றால் சரியல்ல. மேலதிகாரி சொல்லி கொடுத்து பொய் வழக்குக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சிசிடிவி பதிவுகள் எடுப்பதற்கும் பென் டிரைவில் காபி செய்வதற்கோ பிரத்தியேகமாக படிக்க வேண்டுமென்றால் தேவையில்லை எனக்கு அது

சம்பந்தமாக ட்ரைனிங் வழங்கப்பட்டுள்ளது. அந்த ட்ரைனிங் முடிந்து எனக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் அவ்வாறு ட்ரெயினிங் எடுத்து இருந்தால் அது சம்பந்தமான சான்றிதழ் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் எடுத்த சிசிடிவி பதிவுகள் எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை உள்ள சிசிடிவி பதிவுகள் எடுக்கப்பட்டதென்றால் 03.00 மணிக்கு மேல் உள்ள சிசிடிவி பதிவுகள் எடுத்தேன். எனக்கு நிமிடங்கள் ஞாபகம் இல்லை. நான் வழங்கிய சான்றிதழில் எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை உள்ள பதிவுகள் எடுக்கப்பட்டது என்ற விபரங்கள் பார்க்க முடியும் என்றால் சரிதான்.

2. நான் வழங்கிய சான்றிதழில் அது பற்றிய விபரங்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால் அதில் நேரம் குறிப்பிடவில்லை. நான் கொடுத்த அறிக்கை என்னால் தயார் செய்யப்பபட்டது, நான் வெறும் கையெழுத்து மட்டுமே போட்டுக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் எடுத்த புட்டேஜில் யாருடைய முகமோ, வண்டி நம்பர் தெரிந்ததா என்றால் அன்பு செல்வம் என்பவரது முகம் தெரிந்ததாக நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். வேறு யார், யார் முகம் தெரிந்தது என்று நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆய்வாளர் விசாரணையில் அது பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் வாகன எண்ணும் நான் குறிப்பிட்டு ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி விவரங்கள் எதுவும் தெரியாது என்றும், நான் எந்த சிசிடி பதிவுகளை முறையாக எடுக்கவில்லை என்றும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பார்த்த சிசிடிவி பதிவுகளில் அன்புச்செல்வன் முகம் முன்னாள் தெரிந்ததா பின்னால் தெரிந்ததா என்றால் முன்னாள் தெரிந்தது அவர் இருசக்கர வாகனத்தை ஓட்ட வில்லை. இருசக்கர வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்று

என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். அன்றைய தினம் நான் பார்க்கும் பொழுது அவர் பெயர் அன்பு செல்வன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த முகமும் தெரியாது என்று தான் நான் சாட்சி அளித்துள்ளேன் என்றும், தற்போது மேலதிகாரி கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>5-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

உரிய சட்ட விதிகளை பின்பற்றி நான் முறையாக சிசிடிவி பதிவுகளை கைப்பற்றவில்லை என்றும், நான் வழங்கிய Hash Value மற்றும் சான்றிதழ் செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.28 16:03:12 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.